**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 12.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 2875/E/2017**

திரு ஞா.விஜய் அமிர்தராஜ் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வானூர்,
விழுப்புரம் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 16.02.2017 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 18.03.2017 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 12.04.2017 |

******

**ஆணை**

இன்று (12.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு ஞா.விஜய் அமிர்தராஜ் ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு ச.ராமகிருஷ்ணன், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், வானூர், விழுப்புரம் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 16.02.2017 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், ஆப்பிரம்பட்டு கிராமப் புதிய சர்வே எண்.81/12-ல் 0.33 செண்ட் நிலத்தை கணேசன் மனைவி

தமிழ்வாணி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, மேற்படி பட்டா வழங்க வானூர் வட்டாட்சியர் கையாண்ட அலுவலகக் கோப்பின் அனைத்துப் பக்கங்களின் சான்றிட்ட ஒளிநகல், அலுவலகக் குறிப்புக் கட்டுடனும், கிராம நிர்வாக அலுவலரின் அலுவலகப் பதிவேட்டில் மேற்படி பட்டா சம்பந்தமான பதிவுகள் பதியப்பட்டுள்ள பக்கங்களின் சான்றிட்ட ஒளிநகல், விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், ஆப்பிரம்பட்டு கிராமத்தில் வசிக்கும் வடிவேல் கவுண்டர் குமாரர் ஞானம் என்பவர் பட்டா வழங்கக் கோரி கடந்த 25.10.2016 தேதியில் வானூர் வட்டாட்சியருக்கு அளித்த விண்ணப்பத்தின் மீது எந்த அலுவலர், என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனும் நடைமுறைகளைக் காட்டும் ஆணையின் ஒளிநகல், மேலும், விசாரணை செய்த அலுவலர் பெயர், பதவி, அலுவலக முகவரி, விசாரணை செய்த தேதி ஆகிய தகவல்களையும் அவர்களின் நாட்குறிப்பின் அந்த விசாரணை நாட்களின் ஒளிநகல், பட்டா அளிக்காமல் இன்று வரை காலதாமதம் செய்யும் அலுவலரின் பெயர், பதவி, முகவரி அதற்காகப் பதிவு செய்யப்பட்டுள்ள காரணம் மற்றும் ஆவணங்களின் நகல் என 3 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், வானூர் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 17.02.2017 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைச் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி வழங்குமாறும், தகவல் வழங்க மறுத்த பொதுத் தகவல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்குமாறும், தனக்கு இழப்பீடு வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 18.03.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விழுப்புரம் மாவட்டம் அவர்களுக்கும், 12.04.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கும் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (12.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 17.03.2017 மற்றும் 18.04.2017 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக வழங்கக்கூடிய தகவலனைத்தும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்பது தெரிய வருகிறது. இதனை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

> **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில், இதர அலுவலகப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், ஆப்பிரம்பட்டு கிராமப் புதிய சர்வே எண்.81/12-ல் 0.33 செண்ட் நிலத்தின் பட்டா மாறுதல் தொடர்பாகத் தங்களது அலுவலகத்தில் மேற்கொண்ட நடவடிக்கை விபரங்கள் அடங்கிய ஆவணங்களை**

**மீண்டும் தேடிக் கண்டுபிடித்து, கிராமக் கணக்குகளான 'அ' பதிவேடு, 10-1 சிட்டா, FMB உள்ளிட்ட ஆவணங்களையும் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலருடன் இணைந்து, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 2(j)-ன்படி மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு ஆஜர்படுத்தி, ஆய்வு செய்தபின்னர் தனக்குத் தேவைப்படும் தகவலைக் குறிப்பிட்டுக் கோரும்பட்சத்தில், அதனை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி வழங்கி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 2875/E/2017</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வானூர்,
விழுப்புரம் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு ஞா.விஜய் அமிர்தராஜ்,
எண்.2/118, மாரியம்மன் கோயில் தெரு,
ஆப்பிரம்பட்டு கிராமம்,
இராயபுதுப்பாக்கம் (அஞ்சல்)
வானூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

Copy to: Judgement File.
19/09/19